OS.No. 184/2016 – 13.02.2025

PW1 – செல்வராஜ்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த தாவா தாக்கல் செய்வதற்கு முன்னர் பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. பிரதிவாதி எனக்கு உறவினர்தான், அடிக்கடி பார்த்து பேசுவோம். தாவாவில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்று எனக்குத் தெரியும் என்றால் தெரியும். பிரதிவாதி என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்று தெரியும் என்றால் தெரியும். வா.சா.ஆ.2 காசோலையை பற்றி தாவாவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி.

தாவா புரோநோட்டை கைரேகை நிபுணருக்கு அனுப்பியதில் கைரேகை நிபுணர் கைரேகை மேட்ச் ஆகவில்லை என்று சொல்லி உள்ளார் என்றால் தெளிவாக இல்லை என்று கூறி உள்ளார். கைரேகை நிபுணர் அளித்த அறிக்கையில் கைரேகை ஒப்பிட்டு பார்ப்பதற்கு தகுந்த நிலையில் இல்லை  என்று சொல்லி உள்ளார் என்றால் சரி. பிரதிவாதி பதிலுறை தாக்கல் செய்தபிறகு என்னிடம் இருந்த காசோலை குறித்து மறுப்பு பதிலுரை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கையில்

காசோலையை பிரதிவாதி எங்கே வைத்து எப்போது கொடுத்தார் என்று சொல்லவில்லை என்றால் சரி. பிரதிவாதியின் பெயருக்கு கணேசன் மகன் ராஜ்குமார் எழுதிக்கொடுத்த பொது அதிகாரப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று 11.3.2021 தேதியில் ஒரு அறிவிப்பை உரிமையில் நடைமுறைச்சட்டம் கட்டளை 12 விதி 8ன்படி கொடுத்தேன் என்றால் சரி. பொது அதிகாரப்பத்திரம் உள்ளது என்பதை நிரூபிப்பதற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணம் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காசோலையை நாங்கள் தயாரிக்க முடியாது. வா.சா.ஆ.2 ஆவணம் கையில் இருந்திருந்தால் கைரேகை பரிசோதனைக்கு மனு செய்தபோதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. தாவா பரிவர்த்தனை எதுவும் நடக்கவில்லை என்றும் பிரதிவாதி புரோநோட் எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றும் எனவே வழக்கை செலவுத்தொகையோடு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

வழக்கு தாக்கல் செய்தபோது பிரதிவாதி பகுதியாக காசோலை கொடுத்தார் என்று ஏன் சொல்லவில்லை என்றால் பிரதிவாதி செக்கை வைத்திருங்கள் என்று சொன்னார். அதனால் நம்பிக்கையின்பேரில் சொல்லவில்லை. பிரதிவாதி செக்கே கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான்தான் வாதி என்பதை

காண்பிப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கே பொய் வழக்கு என்பதால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.